# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

விலை ரூபா 5/-

தீபம் - 51 | ஆனி 1999 | பக்கங்கள் 12 | ஒளி 37



PERIODICALS DIV
12 AUG


★ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில்

# கூட்டுறவுப்பண்பு, ஜனனாயகக்கோட்பாடு, மிளிர அங்கத்தவர்களின்நேரடிக்கட்டுப்பாடு அவசியம்!

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம்

தற்போது நடைமுறையில் இருக்கும் கூட்டுறவு அமைப்பு முறையில் காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு, அதில் இருக்கும் குறைபாடுகளைக்களைந்து புதிய கூட்டுறவு அமைப்பு முறையை நாம் உருவாக்க வேண்டும், இவ்வமைப்புமுறையானது உண்மையான கூட்டுறவுத்தத்துவங்களைப் பிரதிபலிக்கக் கூடியனவாக இருக்கவேண்டும்.

உரும்பிராய், ஊரெழு விவசாய உற்பத்தி நுகர்ச்சிச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தினை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்து பேசிய வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிதாக அமைக்கப்பட்ட இச் சங்கத்தின் தலைவர் திரு. இ. நடராசா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் திரு. செ. கு. சண்முகநாதன், (அபிவிருத்தி திருமதி கோ. திருநாவுக்கரசு (எண்பார்வை) யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின்சமாசத்தலைவர் திரு. சி. வி. கே. சிவஞானம் ஆகியோர் மங்களவிளக்கேற்றினர்

யாழ். மாவட்ட கூட்டுவுச்சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைத்தார் கோப்பாய் பிரதேச செயலர் திரு. க. கேதீஸ்வரன் சங்கப்பெயர்ப் பலகையைத்திரை நீக்கம் செய்து வைத்தார்.

வடக்குகிழக்குமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இன்று அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின்கீழ், கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வந்த பல திணைக்களங்கள் மாகாண மட்டத்தில் இயங்கத் தொடங்கியுள்ளன. இந்நிலையில் கூட்டுறவு சம்மந்தமான சகல விடயங்களையும்தீர்மானிக்கும் அதிகாரங்களும் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தவாய்ப்பினை நாம் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(2ம் பக்கம் பார்க்க)

யாழ் மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களில் -

## ஐந்து சங்கங்கள் மட்டுமே 120லட்சம்ரூபா மாதாந்த விற்பனை

யாழ்மாவட்டத்தில் இன்றுஉள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மாதாந்த விற்பனையை எடுத்துப் பார்த்தால் ஐந்து சங்கங்கள் தான் 120 லட்சத்திற்கு மேல் மாதாந்த விற்பனையுள்ள சங்கங்களாகும்.

மேற்கண்ட தகவலை வடக்கு கிழக்குமாகாணகூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருமான திரு க. சண்முகலிங்கம் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த போது தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் 60 இலட்சத்திற்கும் 120 லட்சத்திற்கும் இடைப்பட்ட மாதாந்த விற்பனை உள்ள சங்கங்கள் ஒன்பது என்றும் 60 இலட்சத்திற்கு குறைவான மாதாந்த விற்பனை உள்ள சங்கங்கள் பதினொன்று என்றும், குறிப்பிட்டார்.

## உள்ளே...


☆ கூட்டுறவுச் செய்திகள்
☆ உலக சுற்றாடல் தினம்
☆ நிதிச் சந்தையில் தரகு சேவைகள்
☆ வளர்ப்பு மிருகங்களிலிருந்து மனிதருக்குத் தொற்றும் நோய்களும், அவற்றைத் தடுக்கும் முறைகளும்
☆ யாழ். பிராந்திய கூட்டுறவுக் கல்லூரி பதவிவெற்றிடங்கள்
☆ மணிமொழிக் கதைகள்
☆ கழுதையும், குதிரையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் சந்திப்பு

''யாழ். மாவட்டத்தில் இடம் பெற்ற பல்வேறு இராணுவ நடவடிக்கைகளினால் குடா நாட்டில்உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 51.4 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்தநட்டத்தினை வடக்கு கிழக்கு மாகாணசபை அரசாங்கத்திடம் இருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்குபெற்றுத்தரவேண்டும்''

வடக்கு கிழக்கு மாகாணசபை ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவை யாழ். மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள் சந்தித்து இவ் வேண்டுகோளை ஒரு மனதாக விடுத்தனர்.

யாழ். செயலக மகாநாட்டு மண்டபத்தில் யாழ். அரச அதிபர் திரு. க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றஇச் சந்திப்பின் போது வடக்கு கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு ஜி.கிருஷ்ணமூர்த்தி, வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு.க.சண்முகலிங்கம், யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு செ கு சண்முகநாதன் மற்றும் இரண்டாம் படிக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும் கலந்து கொண்டார்கள்

ஆளுநர்மேஜர்ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவிடம் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு;

☆ கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு கூட்டுறவுத் துறைக்குத் 'தனியான சீரான கப்பற் போக்குவரத்துச் சேவை ஒன்றை ஏற்படுத்தித்தர வேண்டும்' எனவும், தவறும் பட்சத்தில் பொது மக்கள் கூடுதல் விலை கொடுத்தே பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டி துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்றும்;

☆ தற்போது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்டுவரும் நிவாரணப் பொருள் விநியோகத்திற்கு ஒரு கிலோவுக்குஒருரூபா வழங்கப்படுகிறது; இந்த ஒருரூபா சங்கங்களுக்குப் போதாமல் இருப்பதால் இதனை அதிகரித்துத்தர வேண்டும் என்றும்;

☆ யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்களையும், நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் உப்பினையும் கொழும்பில் சந்தைப்படுத்துவதற்கு வசதி செய்து தரவேண்டுமெனவும்,

☆ யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி விற்பனைக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் தற்போது பாவித்து வரும் காரியாலயக் கட்டிடத்தை 'மாக்பெட்' நிறுவனத்திடம் இருந்து பெற்றுத்தர வேண்டும் என்றும்;

☆ இராணுவத்தினரிடம் இருக்கும் அச்சுவேலி,தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டிடங்களை மீண்டும் அந்தச் சங்கங்களுக்குத் திரும்பவும் பெற்றுத்தர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## கூட்டுறவுத்தன்மை .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுள்ள சூழ்நிலையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டைப் பொறுத்தளவில் இலாபம், இல்லாவிட்டாலும் பரவாயில்லை அவற்றில் கூட்டுறவுத்தன்மை இருக்கிறதா? என்று பார்க்கவேண்டும். ஆண்டு தோறும் வெறுமனே கூட்டுறவு தின விழாக்களை கொண்டாடி கூட்டுறவுக் கொள்கைகளை மட்டும் பேசினால் போதாது கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையில் சங்கங்களை நடாத்த வேண்டும்.

கூட்டுறவுச்சங்கங்களில்சனனாயகம் இருக்கவேண்டும் அங்கத்தவர்களின் நேரடிக்கட்டுப்பாடு எப்போது சங்கங்களில் தளருகிறதோ அங்கு சனனாயகம் பேச்சளவில்தான் இருக்கும். சங்கங்கள் ஈட்டுகின்ற இலாபம் பங்கீடுசெய்யப்படல் வேண்டும்.

கிளைகளில் அங்கத்தவர்களாக இருப்பவர்களுக்கு ஆளை ஆள் தெரியமல், நியமனப்பத்திரம் கொடுத்து அதன் பின் தேர்தல் என அறிவித்து அதன்பின் கிளைக் குழு உறுப்பினர்கள் தெரிவாகி, பின்னர் பொதுச் சபைக்கு வந்து அதில் இருந்து ஏழு பேர் சங்கத்தை நடத்துவதில் சனனாயகம் இருக்கிறாதா? உண்மையில் சனனாயகம் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

இந்நிலையில் தான்தற்போதைய கூட்டுறவு அமைப்பு முறைக்கு மாற்றுவழி ஒன்று தேவைப்படுகிறது முன்மாதிரியான அமைப்புமுறை ஒன்றைக் காட்டவேண்டும். இதற்காக பழைய கூட்டுறவு அமைப்பு முறையை ஒழிக்க வேண்டுமென்று இல்லை. அதில் உள்ள குறைபாடுகளைக் களைந்து புதிய அமைப்புக்களை உருவாக்க வேண்டும் சிறப்பாக இயங்கும் ஒருபல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இயங்கும்பகுதியில் நான் இப்போதுபுதிய சங்கம் ஒன்றை அமைத்திருக்கின்றோம். இதற்கு நீங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும்.

இவ்வைபவத்தில் யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் திரு செ கு சண்முகநாதன் திருமதி கோ. திருநாவுக்கரசு யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு பெ. கனகசபாபதி யாழ்மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர் திரு சி. வி. கே. சிவஞானம் உட்பட பலர் உரையாற்றினார்கள்,

பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்ட நுகர்ச்சிப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

## பிரியாவிடை
### வைபவம்

யாழ்ப்பணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப தெ.வ) திரு. க. பரநிருபசிங்கம், யாழ். கூட்டுறவுத்திணைக்கள தலைமைக் காரியாலய கூட்டுறவுப்பரிசோதகர் (கணக்காய்வு) திரு. தா. கந்தசாமி ஆகியோர் இம் மாதம் முதல் இளைப்பாறியதை முன்னிட்டு, யாழ். கூட்டுறவுத் திணைக்கள நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் பிரியாவிடை வைபவம் ஒன்றை நடாத்தியது.

நலன் புரிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கூட்டுறவு அ. உ. ஆணையாளர் 'திரு செ. கு சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் இளைப்பாறிய இருவரினதும் கூட்டுறவுசேவைக்காலத்தைபாராட்டிப் பேசியதுடன் மதியபோசனவிருந்தும்அளித்துக் கௌரவிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுச்செய்திகள்

### காரியாலய பணியாளர் பயிற்சி

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க காரியாலயப் பணியாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு 10 06-99 வியாழக்கிழமை சங்கக் காரியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. க பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையின் மாவட்டச் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம், கல்விப்பயிற்சி அளிப்பு உத்தியோகத்தர் திரு வீ. கே. சிவராசசுந்தரம் ஆகியோர் காரியாலய நடைமுறை சம்மந்தமான பயிற்சி அளித்தனர்.

☆ ☆ ☆

### கிளைக்குழு உறுப்பினர்களுக்கு

சாவகச்சேரி ப.தெ.வ அ.கூ. சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு 14-6 99 திங்கட்கிழமை சங்கமண்டபத்தில் நடைபெற்றது

சங்கப் பொது முகாமையாளர் திரு. எம். கிருஷ்ணனினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை மாவட்ட செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் கல்விப்பயிற்சி அளிப்பு உத்தியோகத்தர் திரு. வீ. கே. சிவராசசுந்தரம் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

☆ ☆ ☆

### பிராந்திய சி க கூ சங்க பொருளாளர்களுக்கு

தெல்லிப்பழை. உடுவில் பிராந்தியங்களில் உள்ள சிக்கன கடன்வழங்கும் கூட்டுறவுச்சங்கங்களின்பொருளாளர்களுக்கான பயிற்சிவகுப்பு மருதனார் மடத்தில் உள்ள தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மண்டபத்தில் 13-6-99 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

திரு. ப. உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பில் கூட்டுறவுக் கல்லூரி அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரம் பொருளாளர்களுக்கான பயிற்சியை அளித்தார்.

## கலைவிழாவும் சீருடைவழங்கலும்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் 6 அங்கத்துவ சங்கங்களினால் நடாத்தப்பட்டுவரும் முன்பள்ளி மாணவர்களின் கலை விழாவும், அவர்களுக்கான சீருடை வழங்கும் வைபவமு 11.06.99 வெள்ளிக்கிழமை மானிப்பாயிலுள்ள வலிகாமம் கொத்தணியின் கலையரங்கத்தில் நடைபெற்றது.

கொத்தணியின் தலைவர் திரு. நா. கணேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முதன்மை விருந்தினராக திரு. கே. பரநிருபசிங்கம் (கூ. அ உ ஆணையாளர் ப. தெ. வளம்) பிரதமவிருந்தினர்களாக வலி தென்மேற்கு பிரதேச செயலர் திரு. நா வேதநாயகன், திரு கோ. திருநாவுக்கரசு கூட்டுறவு அ உ. ஆணையாளர் கணக்காய்வு, ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி வடமாகாண தெ. ப. பொ கூ. ச, சமாசத் தலைவர் திரு சி. க. பொன்னுத்துரை தலைமைக் காரியாலய கூ. பரிசோதகர் திரு நா. தவநாதன் கூ. திணைக்கள கல்வி விரிவாக்க உத்தியோகத்தர் திரு. க. சின்னராசா கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு பொ சண்முகசுந்தரம்மாவட்டச் செயலாளர்திரு சு. சிவ ப்பிரமணியம், மற்றும் அங்கத்துவ ப தெ வ அ. கூ. சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். மாணவர்களுக்கான சீருடைகளும் வழங்கப்பட்டன.

## வடிசாலை திறப்புவிழா

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தென்மராட்சிக் கொத்தணியின் கைதடியில் அமைக்கப்பட்டவடிசாலையினைசாவகச்சேரி பிரதேச செயலர் திரு பு. சுந்தரம்பிள்ளை சம்பிரதாயபூர்வமாக அண்மையில் திறந்து வைத்தார்

தென்மராட்சிக் கொத்தணியின் தலைவர் திரு. கி. பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப. தெ. வளம்) திரு கே பரநிருபசிங்கம் வடபிராந்திய மதுவரி ஆணையாளர் திரு, வீ. துரைராசா, வடிசாலை ஆலோசகர் திரு. ச. பாலகுமார், வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் திரு சி. க. பொன்னுத்துரை கூட்டுறவுப்பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரம் ஆகியோரும் ப தெ அ கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் கலந்து கொண்டனர்.

### யூன் மாத முக்கிய தினங்கள்

- 01 கொழும்புத்திட்ட தினம்
- 01 அனைத்துலக குழந்தைகள் நலன் பாதுகாப்புத்தினம்.
- 05 உலக சூழல்பாதுகாப்புதினம்
- 07 உலக தொல்பொருளியலாளர் தினம்.
- 26 உலகப் போதைப் பொருள் தடுப்புதினம்.

### உங்களுக்குத் தெரியுமா?

1. இலங்கையில் உள்ள கூட்டுறவு மாவட்டங்கள் எத்தனை? அவை எப்போது பிரிக்கப்பட்டன?

24 கூட்டுறவு மாவட்டங்களாக 1957ம் ஆண்டு பிரிக்கப்பட்டது. தற்போது 28 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

2. முதலாவது கூட்டுறவுக் கிராமிய வங்கி எங்கு எப்போது உருவாக்கப்பட்டது?

கண்டியில் உள்ள "மெனிக்கின்ன" என்ற இடத்தில் 1964ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

3. கூட்டுறவு ஆசிரியர் பயிற்சித் திட்டம் எந்த உதவித்திட்டத்தின் கீழ், எப்போது நடாத்தப்பட்டது?

சுவீடன் நாட்டு சிடா உதவித்திட்டத்தின்கீழ், 1978ம் ஆண்டு நடாத்தப்பட்டது.

4. உலகில் முதலாவது கூட்டுறவு வைத்திய சாலை சேவைச்சங்கம் எங்கு, எப்போது பதிவு செய்யப்பட்டது?

முதலாவது கூட்டுறவு வைத்தியசாலை 1935ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் "மூளாய்" என்னும் இடத்தில் பதிவு செய்யப்பட்டது.

5. வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுக்கல்லூரி எங்கு எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?

திருகோணமலையில் 1989ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

6. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?

1981ம் ஆண்டு மார்ச்மாதம் 1ம் திகதி ஆம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலக சுற்றாடல் தினம் -

## இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்!

மனிதன் உட்பட பல்வேறு உயிரினங்களும் உயிர்வாழ்வதற்குப் பல்வேறு வகையான இயற்கை வளங்கள் அத்தியாவசிய தேவையாக உள்ளன. இந்த இயற்கைவளங்களை நாம் பாதுகாத்தல் அவசியமாகின்றது. உலகில் மனித சமூதாயம் பெருகி வளர்ந்து கொண்டே இருக்கிறது. வருடா வரு 87 மில்லியன் மக்கள் சனத்தொகையுடன் சேர்த்துக் கணக்கிடப்படுகின்றனர்.

உலகில் சனத்தொகை, பொருளாதாரம் பெருகிவரும் அதேநேரத்தில் மனிதனுடைய வாழ்க்கைத்தரம் குறைந்து வருகிறது. இதனால் இயற்கைச் சுற்றாடலுக்கு பெரும் சவால் ஏற்பட்டுள்ளது. சுற்றாடலே எமது வாழ்வுக்கு அத்தியாவசியமான வளமாவதுடன் எல்லா கழிவுப்பொருள்களையும் உள்வாங்கும் குப்பைத் தொட்டியாகவும் மாறிவருகின்றது. இயற்கை மாசு படுவதால் மனித வாழ்க்கைக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

பெருகிவரும் சனத்தொகை, இயற்கை வளங்களின் அழிவு சுற்றாடல் மாசுபடுதல் ஆகிய பிரச்சினை இருந்தாலும் இயற்கை வளங்களையும், இயற்கைச் சூழல்களையும் நிர்வகித்தல் மிக முக்கியமானதாகும். பூமியில் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத காற்றுநீர் போன்ற சாதனங்களினால் அங்கு உயிரினங்கள் உயிர்வாழ்கின்றன; தாவரங்கள் உயிர்வாழ்வதற்கான உணவு பிராணவாயு, காபஈரொக்டைட், என்றஜீவநாடிகளை வழங்கிவருகின்றன இப்போதுள்ள இயற்கைவளங்களை நாம் பாதுகாக்க முடியுமா? தற்போது கிடைக்கும் வளங்களுக்கு சூழல் மாசடைதலுக்கு, பருவமாற்றங்கள், கைத்தொழில் உற்பத்தி, சமூக வாழ்க்கையும், யுத்தம் ஆகியன காரணிகளாக இருக்கின்றன.

சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக மனித தேவைகளுக்கு சுற்றாடலை மாசடையச் செய்வதற்கு மனிதன் காரணகர்த்தாவாக இருப்பதால் ஏற்படுகின்ற சுற்றாடல் பாதிப்புக்கள் அதிகம் கூடுதலாகும். நாம் பழைய சம்பிரதாயங்களை பின்பற்றுவதினால் விவசாயத்தில் சுற்றாடல் பாதிப்பு ஏற்படுகின்றது. இதனால் எமது விவசாய உற்பத்திகளில் போஷாக்குத் தன்மை அதிகம் இல்லாமையைக் காணக்கூடியதாக உள்ளது.

மனித சமுதாயத்திற்கான எதிர்கால நல்வாழ்வுக்கு சுற்றாடல் மாசடைவதை ஒழிப்பதற்கு ஏற்றவகையிலான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும். வனவளத்தை பாதுகாத்து, அதனை அபிவிருத்தி செய்வதற்கு மக்கள் அனைவரும் ஒன்று சேர்த்து உழைக்க வேண்டும். இதன் மூலம் வனவளத்தை எம்மால் பாதுகாக்க முடியும் இதற்கு வனவளப் பாதுகாப்புச்சட்டம் தீவிரமாக அமுல்படுத்தப்பட வேண்டும். அரசாங்கம் சட்டங்கள் மூலம் வனபரிபாலன முகாமைத்துவத்தை சீரான முறையில் மேற்கொள்ள வேண்டிய அதே சமயம் தனியார் துறையினரும் இதனைக் கடைப்பிடிக்க முன்வரவேண்டும்.

உலக சுற்றாடல் தினத்தை ஒட்டி ( யூன் - 5 ) இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

தேசிய மட்டத்திலும் சரி பிராந்திய மட்டத்திலும், மாவட்டமட்டத்திலும் சரி முக்கியபிரச்சினையாகவுள்ள ''கழிவு''களை அப்புறப்படுத்தலாகும் இதனைச் சிறந்த முறையினைக் கையாண்டு அப்புறப்படுத்த வேண்டும். இவற்றில் உள்ளூராட்சிச் சபைகள் முக்கியத்துவம் கொடுத்து கூடியகவன மெடுக்கவேண்டும். மக்கள் போக்குவரத்துச் செய்யும் வீதிகளை அண்மித்த வாய்க்கால்கள் நீரோடைகள் என்பன சிறந்த முறையில் துப்பரவாகப் பேணப்படவேண்டும். இந்தவகையில் மக்கள் உள்ளூராட்சி சபைகளுடன் கூடியளவு ஒத்துழைப்பை வழங்கவேண்டும். வீடுகளிலுள்ள குப்பை கூழங்களைக்கூட்டி வீதிகளில் போடுவதினால் பாதிப்படைகிறவர்கள் மக்களே தவிர வேறெவரும் இல்லை. இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்படவேண்டும்.

மனித வாழ்க்கைக்கு அத்தியாவசிய தேவைகளாக இருக்கின்ற காற்று, நீர், மற்றும் மண், சுற்றாடல் மாசடைதல் காரணமாக் அழிவை ஏற்படுத்தி மனிதனுக்கும் ஏனைய ஜீவராசிகளுக்கும் ஏற்படுகின்ற பாதிப்பைப்பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்கவேண்டும். எமது வாழ்க்கையும், இளம் சிறார்களின் எதிர்காலமும் பூமியிலும், அதனுடைய தேகாரோக்கியத்திலும் தங்கி இருக்கின்றது. இதனால் அழிவு நிலையில் இருந்து நாம் பாதுகாப்புப் பெறுவதற்காக சகலவழிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சுற்றாடல் மாசடையா வண்ணம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

### வர வேற்கிறோம்

கூட்டுறவாளர்கள், எழுத்தாளர்களிடமிருந்து கதை, கட்டுரை கவிதை, பொது அறிவு விடயங்களை எதிர் பார்க்கிறோம். எழுதும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் சுருக்கமாக எழுதி

ஆசிரியர் ஐக்கியதீபம்
யாழ்மாவட்டக்கூட்டுறவுச் சபை,
இல 14 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## மாரடைப்பு

### மாரடைப்பு ஏற்படின் கீழ்க் கண்ட அறிகுறிகள் ஏற்படலாம்

- நெஞ்செலும்பிற்குப் பின்னால் இறுக்கும் அசாதாரண தன்மையுடைய தொடர்ச்சியான வலி.
- இந்த வலி இடது தோளை நோக்கியோ, கைவழியாகவோ, கழுத்தை அல்லது தாடையை நோக்கியோ பரவும்.
- நெஞ்சுவலியுடன் வியர்வை, ஓங்காளம், வாந்தி, சுவாசிப்பதில் கஷ்டம் ஏற்படலாம்.
- இப்படியான அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்திய சலையில் அனுமதிக்கப்பட வேண்டும். தாமதம் ஏற்படின் மரணம் ஏற்படலாம். ''கைவைத்தியம்'' எந்தவிதபலனும் தராது.

நன்றி - சுசமஞ்சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிச் சந்தையில் தரகுசேவைகள்
# Factor Services In Finacial market

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி திரு. மா. நடராச சுந்தரம் அவர்களின் " நிதிச்சந்தையில் தரகுசேவைகள் " என்னும் கட்டுரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகியுள்ளது. மிகுதி அடுத்தமாதம் பிரசுரமாகும்.

## தரகுசேவை

நிதிச்சந்தை ஆவணங்களில் தரகு சேவைகள் தொழிற்படு மூலதனத்தின் மீதும் முகாமைத்துவ மீதும் பலதாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. கடந்த பல வருடங்களாக நிதிச் சந்தையில் பலவகையான நிதிச்சாதனங்கள் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன. எந்த நோக்கங்களுக்காக இந்த சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதிலேயே அநுகூலங்கள் பிரதிகூலகங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. குறிப்பாக நிறுவனங்களுக்கு நிதியைப்பெறும் மூலகங்கள் இந்தசாதனங்களின் வரவால் பன்முகமாகியுள்ளன. இந்தப்பின்னணிகளில் 'தரகு' கம்பெனிகளின் சேவைகள், செயற்பாடுகள் உற்றுநோக்கப்பட வேண்டும். நிதிநிறுவனத்திற்கு வேண்டிய தொழிற்படு மூலதனத்தை திரட்டி நிதி நிலையை சீராக்குவதற்காக கையாளப்படும் மார்க்கமேதரகு எனலாம்.

தொழிற்படுமூலதனத்தை ஆக்கும். கூறுகள்பல இருக்கின்றன. குறிப்பாக கையிருப்புப்பணம், சரக்கிருப்பு, கடன்பட்டோர், குறுங்காலக்கடன்கள். ஒருசிலவாகும் கடன்பட்டோரின் (Debits) பெறுகைகள் கையிருப்பு, வங்கி காசுக்கு அடுத்த நிலையில் உள்ள திரவப்பணம் எனக்கூறலாம். கடன்பட்டோரின் பெறுகைகள், சரியான முறையில் முகாமை செய்யப்படுமாயின் திரவப்பணத்துடன் தொடர்பான பிரச்சினைகள், சிக்கல்கள் நிறுவனத்திற்கு ஏற்படமாட்டாது என்பதனை விளங்கிக்கொள்ள வேண்டும். எனவேதான் கடன்பட்டோரின், பெறுகைகளை சரியாக முகாமிப்பதற்கான நுட்பங்களில் தரகுச் சேவையானதுசிறந்த ஒரு நுட்பம் எனக்கூறப்படுகின்றது.

தரகிடல் சேவைக்கு பலவிமான விளக்கங்கள்இன்று கொடுக்கப்படுகின்றன.

அ. அறவிடமுடியாக் கடன்களைஅறவிடுவதுடன் தொடர்பான நிதிச் சேவையை ஆற்றுவதே தரகுச்சேவை என்றும்,

ஆ. நிதிப்பிரச்சினையினால் முறிவடையும் நிலையிலுள்ள நிறுவனத்திற்கு நிதியீட்டம் செய்வதே தரகுச் சேவை என்றும்.

இ. நிறுவனங்களுக்கு உயர்கட்டணங்களில் நிதியை வழங்குவதே தரகுச் சேவை என்றும்,

மாறுபட்ட முறையில் பிழையாகவும் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான தவறான விளக்கங்கள் தரகுச்சேவையின் சிறப்பினை அதாவது நிறுவன வளர்ச்சிக்கான பிரதான ஒரு கருவி என்பதனைக் குறைத்து மதிப்பிடக் காரணமாக அமைகின்றன. இது ஒரு பயனுறுதி வாய்ந்த நிதிச்சாதனமாகும். ஆனால் பிழையான முகாமைத்துவத்தால் விழையும் பிரச்சினைகளுக்குச் தரகுச் சேவை நிச்சயமாக ஒரு தீர்வல்ல. அதன் நோக்கம் அப்படியானதும் அல்ல. அறவிடமுடியாக்கடன்களை அறவிடும்பணியைத்தரகுச்சேவைபாரமெடுப்பதில்லை.

எனவே தரகுச்சேவை தொடர்பான பிழையான விளக்கங்களைத் தெளிவுபடுத்தி தரகுச்சேவையின் தத்துவத்தை அடிப்படைநோக்கத்தை விரிவுபடுத்தவேண்டியுள்ளது.


**மா. நடராசசுந்தரம்**
வணிக முகாமைத்துவ பீடாதிபதி
யாழ். பல்கலைக்கழகம்.


## தரகுச்சேவை - தத்துவம்

தரகுச்சேவை நடவடிக்கையில் மூன்று தரப்பினர் தொடர்புபடுகின்றனர்.

அ பண்டங்கள்சேவைகளைவிற்பவர்

ஆ அதன் வாடிக்கையாளர் (கடன் கொள்வனவாளர்)

இ' தரகுக்கம்பனி

2. தரகுச்சேவை ஏற்பாடு

அ விற்பவர் - (முதல்வருக்கு) தொடர்ச்சியான அடிப்படையில் கடன் கொள்வனவாளர்களின் கடன் தொகைகளைக் கொள்வனவுசெய்தல் (அனுமதிக்கப்பட்டகழிவுடன)

ஆ. கடன் தொகைகள் தொடர்பாக பின்வரும் சேவைகளை வழங்குதல்.

i) கடன் தொகைகளுக்கு எதிராக உடனடி நிதியீட்டம

ii விற்பனைப்பேரேட்டை நிர்வகித்தல்.

iii) கடன்களை (கொள்வனவாளரிடமிருந்து) திரட்டுதல்:

iv) கடனுக்குப்பாதுகாப்பளித்தல்.

இங்கே பிரதான விடயம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். மேற்சொல்லப்பட்ட சேவைகளை ஆற்றுவதற்கு விசேட சிறப்புப் பெற்ற நிறுவனங்கள் இயங்குகின்றன உதாரணமாக வணிகவங்கி பெறுகைகட்கு எதிரான குறுங்கால நிதியீட்டத்தைச் செய்ய முடியும் ஒரு கம்பியூட்டர்நிறுவனம் பயனுறுதி வாய்ந்த விற்பனைப் பேரேட்டுச் சேவையை ஆற்ற முடியும். கடன் திரட்டும் நிறுவனம், கடன்களைத் திரட்டும் சேவையை ஆற்றமுடியும். காப்புறுதி நிறுவனம் கடன் பாதுகாப்பு வசதியை மேற்கொள்ளமுடியும். ஆனால் தரகுச் சேவை மட்டுமே மேற்கொள்வதற்கு கையாள்வதற்குரிய அவசியமான வளங்களையும் கட்டமைப்பையும் கொண்டுள்ளது என்பது மிகவும் பிரதானமாக அவதானித்து விளங்கிக் கொள்ளவேண்டிய ஒரு விடயமாகும்.

## தரகுச்சேவைக் கட்டணங்கள்

தரகுக்கம்பனி வருமானத்தை இரண்டுவழிகளில் ஈட்டுகின்றது

1. முதல்வருக்கு வழங்கப்படும் முற்பணங்களில் (கடன்களுக்கு எதிராக கிடைக்கும் கழிவு.

வங்கி மேலதிகபற்று வசதிக்கு எவ்வாறு வட்டிக்கட்டணங்கள் கணக்கிடப்படுகின்றனவோ அதே அடிப்படையில் முதல்வருக்கு வழங்கப்பட்ட முற்பணங்களின் அடிப்படையில் தீர்க்கப்படாத மேலதிகபற்று வசதிகளுக்கு எவ்வாறு வட்டிக்கட்டணங்களுடன் (வணிகவங்கிகளில்) அறவிடப்படுகின்றதோ அதேபோல தரகுக்கம்பனி அறவிடும் கழிவுகளை ஒப்பீடு செய்வது பொருத்தமானது.

2. மேற்கூறப்பட்டசேவைகளுக்கான கட்டணம் (சேவைக்கடடணம்)

1. முதல்வரிடமிருந்துகொள்வனவு செய்யப்பட்ட கடன்களின் பெறுமதியில் 0 5% - 2% வரை;

( 8 பக்கம் பார்க்க )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு மிருகங்களிலிருந்து மனிதருக்குத்தொற்றும் நோய்களும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்

மனிதருக்கு நோயை உண்டாக்கும்சாரணிகளில் பெரும்பாலானவை மிருகங்களிலிருந்து தோன்றுகின்றன. ஆகையால் இக்காரணிகளின் காவிகளாக விளங்கும் வளர்ப்புப் பிராணிகள் மனிதனுக்கு பெரும் ஆபத்தை விளைவிப்பனவாகின்றன. மிருகங்களிலிருந்து மனிதருக்குத் தொற்றும் வியாதிகள் பல இனங்காணப்படாமலும். அறிவிக்கப்படாமலும் கவனிக்கப்படாமலும் போய்விடுகின்றன.

பல நோய்கள் மனிதரின் மிக அண்மையில் அவர்களது வளர்ப்புப் பிராணிகளாகவும், செல்லப்பிராணிகளாகவும்வளரும் மிருகங்களிலிருந்து தொற்றுகின்றன. சில நோய்கள் ஒருவர் வதியும் வீட்டில் அல்லது சமீபத்தில்வாழும் எலிகள்மூலமும், பண்ணை மிருகங்கள் மூலமும் தொற்றப்படுகின்றன. இந்நோய்களுட் சில மூளையைத் தாக்கக்கூடியனவாகவும் ஈரல் நுரையீரல், சிறுநீரகம், முதலியவற்றை வீங்கச் செய்வனவாகவும், சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய அபாயகரமானதாகவும். இருக்கின்றன. ஆகையால் அவற்றைப் பற்றிய சிலமுக்கிய தகவல்களை இங்கே அறியத்தருகின்றேன்.

## 1 விலங்கு விசர் நோய் (Rabies)

இது மிகப் பழங்காலந் தொட்டு மனிதரையு , மிருகங்களையும் கொடூரமாக பாதித்து வருகிறது. உண்மையில் இதுஒரு விசர் மிருகக்கடி நோயாகும். எல்லா மிருகங்களுக்கும் இந்நோய்தொற்றக் கூடியதானாலும் நாய்களே அதிக தாக்குதலுக்குட்படுகின்றன, ரேபீஸ்நோயின் காரணிஒரு வைரஸ் கிருமியாகும். நாய்களில் இந்நோய் இரு வகைப்படும்.

### தீவிர விலங்கு விசர்

நாயின் இவ்வகைத் தொற்றின் அறிகுறிகளாக ஆரம்பத்தில் அமைதியின்மையும், விறுவிறுப்பும் காணப்படும். சிறுசத்தமும் பெரும் அதிர்ச்சியைக் கொடுக்கக்கூடியதாக நரம்புத் தொகுதி பாதிப்படைகிறது. நாய் கால் துடைப்பம், சிறுமரத்துண்டுகள் போன்றவற்றைக் கடித்து சப்பி விழுங்கும். தனது உடம்பைக் கடிக்க முயலும், உணவில் விருப்பம் இராது, தடித்தகுரலில் ஊழையிடும், கண்கள் சிவந்து, சுவாசிப்பதில் கஷ்டமும் ஏற்படும்.

தொற்று அதிகரிக்க எஜமானர் உட்பட எவரையும் கடிக்க முற்படும். இந்நிலையில் உணவோ நீரோ விழுங்க முடியாதிருக்கும். வாயிலிருந்துஎச்சில் தொடர்ச்சியாக வடியும். கால்களில் வாதம் ஏற்பட்டு நோய்த் தொற்றேற்பட்ட ஐந்து நாட்களில் இறந்துவிடும்.

### மந்தமான விலங்கு விசர்

இவ்வகைநோயின் ஆரம்ப அறிகுறியாக உடம்பு அசைவற்றுப் போகும் முதலில் கீழ்த்தாடைத் தசைகளும் அதன் பின் உடம்பின் ஏனைய பகுதிச் தசைகளும் அசைவற்றுப் போகும் இந்நிலையில் நாயின் வாய் திறந்தபடி கடிக்க எத்தனிக்காது காணப்படும். ஒரு கிழமைக்குள் நாய் இறந்துவிடும்.

இறந்த செய்தி காவல் துறையினருக்கு உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும். அவர்கள் இறந்த நாயின் தலையை வெட்டி எடுத்து ஐஸ்பொதியில் வைத்து வைத்திய ஆய்வு நிலையத்திற்கு அனுப்ப ஆவன செய்வார்கள்.

நோயுற்ற நாய் கடிப்பதால் மனிதருக்கு இந்நோய் தொற்றும், விசர் நாயின் வாயில் வடியும்எச்சில் சாயங்களில்பட்டால் அதன்மூலமும் தொற்று ஏற்படலாம.

### பாதுகாப்புச் சிகிச்சை

உடனடியாக நாய்க்கடியால் ஏற்பட்ட காயத்தை சவர்க்காரத்தினால் கழிவிதுப்பரவாக்குதல்வேண்டும் உடனடியாக வைத்தியரை நாடி ரேபீஸ் தடுப்பு ஊசி ஏற்றப்படல் வேண்டும் தடுப்பு முறையாக சகல நாய்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படல் வேண்டும. கட்டாக்காலி நாய்களை அழித்தல் வேண்டும்.

## 2 அடைப்பான் (Anthrax)

இது கால்நடைகளைப் பீடிக்கும் ஒருகொடிய தொற்றுநோய் இந்நோய் சடுதியாக ஏற்பட்டு 48 மணித்தியாலங்களுக்குள்கால்நடைகளைகொன்றுவிடும் அனேகமாகநோய்க் குணங்குறிகள் தோன்றுமுன்பே கால் நடைகள் இறக்க நேரிடும், கண், மூக்கு சிவத்தல் இரத்த பேதிசிலவேளைகளில் காணப்படும். அனேகமாக இறந்த மாட்டின் நாசியிலும் மல வாசலிலும் உறையாத இரத்தக்கசிவு தென்படும்.

இந்நோயின் காரணிபசிலஸ்' 'அந்தறாசிஸ்' ' எனப்படும்கோலுருக்கிருமியாகும். இதன் சிறைப்பையுரு நிலை (Spore) பலவருடங்களுக்கு மேலாக மண்ணில் உயிருடன் இருக்கும்.

மனிதருக்கு இக்கிருமித் தொற்று மூன்று விதத்தில் ஏற்படலாம்தோலூடாகவும், சுவாசம் மூலமும் தொற்றுள்ள உணவு மூலமும் தொற்றலாம். தோல்தொற்றில் கொடூரமான கொப்புளங்கள் தோன்றுகின்றன. பின்னர் இவை வெடித்து கறுப்பு நிறக்காயங்கள் ஏற்படுகின்றன. சுவாசத் தொற்றினால் குளிர்ச்சுரம் உண்டாகின்றது.

### தடுப்பு முறை

கால்நடைகள் சடுதியாக இறந்து மேற்கூறப்பட்ட அறிகுறிகள் தென்பட்வுடன் அப்பகுதியை நோயுள்ளபகுதியாகப்பிரகடனப்படுத்தும் பொருட்டு உதவி அரசாங்க அதிபருக்கு அப்பகுதிக் கால் நடைவைத்தியர் மூலம் அறிவிக்கப்படல்வேண்டு ;

வைத்தியகலாநிதி
**இ. இராஜராஜேஸ்வரன்**
விரிவுரையாளர், மருத்துவபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தடுப்புமுறையாக நோய்க்கிருமிகள் பரவாமல் இறந்தகால்நடைகளை முழுமையாக எரித்தல் அல்லது 6அடி ஆழத்தில் நிலத்துள் புதைத்து விடல் வேண்டும், ஏனைய கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றப்படல் வேண்டும

## 3 ஏற்பு (Tetanus)

இந்நோயை க்ளோஸ்ரிடியம்ரெட்டனிஎனப்படும் பக்ரீறியாக் கிருமிகள் உண்டாக்குகின்றன. இக்கிருமிகள் பொதுவாக குதிரைமலம (லத்தி) கால் நடைகளின் சாணி முதலியவற்றில் உண்டு மனிதருக்கு இக்கிருமித் தொற்று இக்கழிவுகளில் இருந்தும் காயங்களுடாக ஏற்படுகின்றது.

மனிதரில் முதலில் ஏற்பு வலி தோன்றி பின்னர் வாய் திறக்க முடியாதபடி கெட்டியாக விறைத்தும் கை கால்கள்விறைத்தும் காணப்படும். இறுதியில் சுவாசத்தொகுதி தாக்கப்பட்டு மரணம் ஏற்படும்.

(7ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தடுப்பு முறை

1 காயங்கள் ஏற்பட்டவுடன் ஏற்பூசி ஏற்றுதல் மிக அவசியம்

2 கர்ப்பிணித்தாய் 3 மாத கர்ப்பத்தின் பின் முதன் முறை பரிசோதனைக்குச் செல்லும் போது முதலாவது ஏற்பூசியும் 6 கிழமைகளில் இரண்டாவது ஏற்பூசியும் ஏற்றிக் கொள்ளுதல் அவசியம்

3 குழந்தை பிறந்தவுடன் தொப்புள் நன்றாகத் தொற்று நீக்கம்செய்யப் படுதல் அவசியம்.

4 காயங்கள் ஏற்படுமுன்னரே தடுப்பூசி ஏற்றி வாழ்நாள் முழுவதும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

## 4 புருசெல்லோசிஸ் (Brucellosis)

இந்நோயின் காரணி புருசெல்லா எனப்படும் பக்ரீரியாக்கிருமி யாகும் இக்கிருமி தொற்று கால்நடைகளில் கருச்சிதைவை ஏற்படுத்துகிறது. கன்றை குட்டிஈன்ற பின்னர் தற்காலிகஅல்லது நிலையான மலட்டுத்தன்மையைஉண்டாக்குகிறது. மாடுகள் 7 ஆம் அல்லது 8ஆம்மாதத்தில்கன்றை குட்டி ஈன்றால் இந்நோயுள்ளதெனச் சந்தேகிக்கலாம் மனிதருக்கு தொற்றுள்ள ஆட்டுப்பால் பசுப்பால், மூலம் இந் நோய்க்கிருமிகள்தொற்றுகின்றன.

# சுகவளம்

மனிதரில் இது சுருதித் தொற்றாக மாறி நாளடைவில் பல இளையங்களைத் தாக்குகிறது குணம் குறிகளாக மயக்கம், பலவீனம் வலி, அதிக வியர்வை, பிந்நேரங்களில் காய்ச்சல் கூடியும் இரவில் காய்ச்சல் விடுவதுமாக காணப்படும்.

### தடுப்பு முறை

நன்றாக கொதிக்க காய்ச்சிய பாலை அருந்துவதால் இந் நோய்த் தொற்று ஏற்படாது தடுக்கலாம்.

## 5 காச நோய்

இது மைகோ பக்ரீறியம் ரியூபகி லோசிஸ்எனப்படும் பக்ரீறியாக்கிருமியின் ''போவைன்'' வகையினால் பசுக்களுக்கு ஏற்படும் நோய்.

மனிதவகை பக்ரீறியாவினால் ஏற்படும் காசநோய்சுவாசத் தொகுதியூடாகத் தொற்றுகின்றது ஆனால் 'போவைன்' வகைக் காச நோய் மனிதருக்கு நோயுள்ள பசுவின் பால் மூலம் தொற்றுகின்றது

### தடுப்பு முறை

1 பண்ணையில்உள்ளசகலபசுக்களையும் காச நோய்ப் பரிசோதனைக் குட்படுத்தி நோயுள்ளவற்றை அகற்றுதல் வேண்டும்.

2 பசுப்பாலை பாச்சர் முறைப்பிரயோகத்திற்குட்படுத்தி (Pasteurization of milk) நோய் பரவுவதை தடுக்கலாம்.

3 பாலை நன்கு கொதிக்கக் காய்ச்சியபின் குடிப்பதன் மூலம் இந் நோய்த் தொற்றைத் தடுக்கலாம்.

## 6 பொற்றுலிஸம் (Botulism)

உணவுப்பொருள்களை நச்சுப் படுத்தும் காரணியான கிளொஸ்ரிடியம், பொற்றுலிஸம் என்ற பக்ரீறியா கிருமி பொதுவாக கால் நடைகளின் கழிவிலும், மண்ணிலும் உள்ளது மரக்கறி, பழம் போன்றவை பதனிடப்பட்டு அடைக்கும் போது துப்புரவு பேணப்படாமையால் இக் கிருமித் தொற்று அவ்வுணவுகளில் ஏற்படுகிறது. ஆகையால் இப்படி அடைக்கப்பட்ட பொருட்களை நன்றாக வெப்பமேற்றி 10 நிமிடங்கள் வேகவைத்து உண்பதன் மூலம் இத் தொற்றைத் தடுக்கலாம்.

## 7 சல்மோனெல் லோசிஸ் (Salmonellosis)

இந்நோய் சல்மோனெல்லா பக்ரீறியாக் கிருமிகளால் உண்டாகிறது. கோழிகளில் வெள்ளை நிறக் கழிச்சலையும், கால்நடைகளில் வயிற்றோட்டத்தையும் ஏற்படுத்துகிறது கோழிகள், புறாக்கள், கால் நடைகள் இந்நோய்க் கிருமிக் காவிகளாக விளங்குகின்றன.

மனிதருக்கு பறவைகள், மிருகங்களின் எச்சத்தினூடாக தொற்றேற்படுகிறது பதனிடப்பட்ட உணவு அடைக்கப்படுகையில் துப்பரவு பேணப்படாதவிடத்து அவ்வுணவு மூலம் தொற்றவாய்ப்புண்டு. தொற்றுள்ள இறைச்சி, முட்டை, பால்முதலியவைஉட்கொள்வதாலும் தொற்றுகின்றது.

### தடுப்புமுறை

பறவைகள் மிருகங்கள் வளர்ப்பவர்கள் சிறந்த பராமரிப்பு முறைகளைக் கடைப்பிடித்து. சுகாதாரம் பேணல் வேண்டும். பட்டிகளைத் துப்புரவுசெய்து கால்நடைத் தீன்களை மாசுபடுத்தாது வைத்திருத்தல் வேண்டும்

## 8 ரொக்சோபிளாஸ் மோசிஸ் (Toxoplasmosis)

ரோக்சோ பிளாஸ்மா எனப்படும் நுண்ணுயிர்க் கிருமிகளால் ஏற்படும் நோய், தொற்றுள்ள பூனையின் எச்சம் ஊடாகவும் மனிதருக்குத் தொற்றுகிறது. தொற்றுள்ள தாய்மூலம்கர்ப்பத்தில் வளரும் சிசுவிற்கு சூழ்வித்தகம் ஊடாகவும் தொற்று ஏற்படும். ஆகையால் கர்ப்பிணித் தாய்மார் பூனையின் மல அழுக்கினால் தொற்று ஏற்படுவதைத் தடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வகைத் தொற்று மூளையையும் கண்களையும் தாக்குவதால் இந்நோய் மிகவும் பயங்கரமானதாகும்.

## 9 படர்தாமரை (Ringworm)

பூஞ்சன வனால் உண்டாகும் ஒரு வகைத் தோல் நோய். இது தோல் மயிர் நகம், ஆகியவற்றைத் தாக்குகின்றது. நாய், பூனை, கால்நடை முயல், எலி ஆகிய பிராணிகளிலிருந்து மனிதருக்கு தொற்றுகின்றது, இப் பிராணிகளை விட்டு வளர்க்கும் கூடுகளையும், வதிகளையும் சுற்றுப் புறங்களையும் தொற்று நீக்கித் துப்பரவு செய்வதால் இந் நோயைத் தடுக்கலாம்.

## 10 லெப்ரோஸ்பை றோசிஸ் (Leptospirosis)

இந்நோயின் காரணி சுருள்வடிவமுள்ள ஒருவகை பக்ரீறியா கிருமி ஆகும். இந்நோய் நாய், பன்றி, எலி போன்ற பிராணிகளைத் தாக்கி மஞ்சட் காமாலையை உண்டாக்குகிறது. கிருமிகள் நோயுள்ள பிராணிகளின் சிறு நீரில் கழிக்கப் படுகின்றன. காயம் அல்லது சிதைவு ஏற்பட்ட தோல் ஊடாக இக்கிருமிகள் மனிதருக்குத் தொற்றுகின்றன. மனிதரில் கடுங்காச்சல், தசைநோ, ஈரல் சிறுநீரகப்பாதிப்பு, மஞ்சட்காமாலை முதலியவை ஏற்படுகின்றன.

### தடுப்புமுறை

சுய சுகாதாரம் பேணுவதாலும், எலிகளை அழித்தலாலும் இந் நோயைத் தடுக்கலாம். தொற்றுள்ள மிருகங்கள் அசுத்தப்படுத்தும் ஆறு, குளம் முதலிய வற்றில் குளிப்பதை தவிர்க்க வேண்டும்.

(10ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிச் சந்தையில்......
(5ம் பக்கத் தொடர்ச்சி)

2. தரகுக்கம்பனியால் ஆற்றப்படும் பணியின் அளவின் அடிப்படையில் கட்டணவீதம் மாறுபடும்.

உதாரணம், கடன் திரட்டும் நடவடிக்கைப் பணி, கடன் தொகையின் விரிவைப் பொறுத்தமையும். கடன் தொகைகள் அதிகமானால் கட்டண வீதம் அதிகரிக்கும்.

## கடன் பாதுகாப்பு வசதி

1 குறிக்கப்பட்ட எல்லை வரை முதல்வரின் கடன் தரகுக்கம்பனியால் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது

2. கடனாளி உரியகாலத்தில் கடனைச் செலுத்தத்தவறினாலும் தரகுக் கம்பனிநடவடிக்கைகள் தொடரும்.

3. தரகுக்கம்பனி கடனாளிபற்றிக் கணிப்பீட்டை மேற்கொள்ளும்.

4. கடனை உரியகாலத்தில் செலுத்தத்தவறும் போது தரகுக்கம்பனி தாங்கும் ஆபத்துக்களுக்கு மேலதிகமான கட்டணத்தை அறவிடுகிறது.

5. தரகுக்கம்பனியின் பொறுப்பு அது தாங்கும் ஆபத்துக்களின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டது.

6. முதல்வர் விநியோகித்த தரமற்ற பண்டங்கள் தொடர்பாக ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தரகுக் கம்பனி பொறுப்பாக முடியாது

## துணை நாடலற்ற ஒப்பந்தமும் துணை நாடலுடைய ஒப்பந்தமும்
## (Non Recourse and with Recourse Aggrements)

தரகுக்கம்பனி வழங்கும் கடன் பாதுகாப்பு வசதி செய்யும்போது மேற்கொள்ளும் தரகு ஒப்பந்தம் துணைநாடலற்ற ஒப்பந்தம் (Non Recourse Aggrements) என அழைக்கப்படுகிறது. கடன்பாதுகாப்பு வசதி மேற்கொள்ளப்படாத போது முதல்வரின் கடனாளி தரகுக்கம்பனிக்கு கடனை மீளளிக்கத்தவறும் போது அக்கடன் தொகையை முதல்வரிடமிருந்து அறவிடுவதற்கான உரிமை தரகுக் கம்பனிக்கு உண்டு இந்த வகையான துணைநாடலுடைய ஒப்பந்தம் (With Recourse aggremnt) என அழைக்கப்படுகிறது. ஒரு விற்பனையாளர் (தரகுக்கம்பனியின் முதல்வர்) எவ்வாறு செயற்படுகின்றார் என்பதனைப்பார்ப்போம். அவர் தன் விற்பனவுகளைத்தரகுக் கம்பனி மூலம் பெறவிரும்புகின்றார். தனது கடன் கொள்வனவாளருக்கு விற்கும்போது விற்பனவுச் சிட்டையுடன் பண்டங்களையும் விநியோகிக்கின்றார்.

தரகுக்கம்பனிக்கு விற்பனவுச் சிட்டைபிரதியை அனுப்பிவைக்கிறார்.

விற்பனவுச்சிட்டையில் வாசகம் ஒன்று குறிப்பிடப்படும்.

''கடன்திரட்டல் தரகுக்கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது'' என் பதே அக்குறிப்பு. இக்குறிப்பின்படி கடனாளி குறிப்பிட்ட தினத்தில் தரகுக்கம்பனியிடம் கடனைத் தீர்க்க வேண்டும்.

விற்பனவுச் சிட்டைப்பிரதியை பெற்றவுடன் தரகுக்கம்பனி விற்பனைப் பெறுமதியில் 80% முதல்வருக்குக் கொடுப்பனவு செய்வதற்குத் தன்னைத் தயார்படுத்தும்.

முதல் 80% அல்லது இந்த எல்லைக்குள் தாம் விரும்பும் தொகையை தரகுக்கம்பனியிடம் இருந்து பெற்றுக் கொள்ள உரிமை உண்டு.

தரகுக் கம்பனி கடனாளியிடம் கடன் தொகையை அறவிடும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்.

கடனைப் பூரணமாகத்திரட்டியவுடன் தமது கழிவு, சேவைக்கட்டணங்களைக் கழித்துக் கொண்டு (மிகுதி 20%ல் இருந்து) மிகுதியை முதல் வருக்கு கொடுப்பனவு செய்யும்.

இந்நடவடிக்கைகளின் போது தரகுக்கம்பனி விற்பனைப் பேரேடுகளை நிர்வகித்தல் கடன் திரட்டுதல் ஏனைய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## தரகுக்கம்பனியால் ஏற்படும் நன்மைகள்

தொடர்ச்சியான திரவத்தன்மை

முதல்வர் விற்பனைப்பட்டியலை அனுப்பியவுடன் உடனடியாக பணம் பெறும் வசதி,

விற்பனைப்புரள்வின் விகிதாசாரத்திற்கேற்ப பணம் தொடர்ச்சியாகக்கிடைக்கும்.

பண உட்பாய்ச்சல் அதிகரிப்பு.

பணச்சுற்றோட்டம் அதிகரிக்கும், தொழிற்படு மூலதனம் திரட்டல் சிரடைதல்.

இவ்வாறுபண உட்பாய்ச்சல் காரணமாக முதல்வர் மூலப்பொருட்களையும் வேறுஉள்ளீடுகளையும், கொள்வனவு செய்து கொள்ளலாம்.

2. காசுக்கொள்வனவின் போது கணிசமான காசுக்கழிவு கிடைக்கின்றது.

3. இக்காசுக்கழிவுகளால் ஏற்படும் சேமிப்பு தரகுக் கம்பனிக்குக் கொடுப்பனவு செய்யப்படும் கழிவு சேவைக்கட்டணங்கள் ஆகியவற்றை விடக் கூடுதலாகவும் அமையலாம்.

4. முதல்வர் தாமதமின்றிஉற்பத்ச் சுற்றோட்டங்களைஆரம்பிக்கலாம். தரகுக் கம்பனியின் சேவை இல்லா விடின் முதல்வர், (அ) கடன்பட்டோர் கடன்களைத் தீர்க்கும் மட்டும் காத்திருக்க வேண்டும். (ஆ) வணிகவங்கிகளிடம் கடன் பெறவேண்டும்

5. முதல்வர்வேறுவகைக்கொடுப்பனவுகளை தாமதமின்றி மேற்கொள்வார். 1 சம்பளங்கள் கூலிகள், 2 அரசாங்கவரிகள், தீர்வைகள், 3 பயன்பாட்டுச் சேவைக்கட்டணங்கள், மின்கட்டணங்கள்.

இதன் காரணமாக தாமதக் கொடுப்பனவுகளால் ஏற்படும் அசௌகாரியங்கள்நிறுவனத்திற்குஏற்படாது.

## கிரயச் சேமிப்புக்கள்

தரகுக் கம்பனிகளிடம் விற்பனைப் பேரேட்டுப்பணிகளைப் பாரப் படுத்துவதால் உருவாகும் நன்மைகள் சேமிப்புக்களை பலர் விளங்கிக் கொண்டதாக தெரியவில்லை

விற்பனைப்பேரேட்டு நிர்வகித்தல் பராமரித்தல் தொடர்பான, செயலக நிர்வாகச் செலவு, நிர்வாகப்பதவியினர்செலவு தபாற்கட்டணம் காகிதாதிகள் செலவு, காரியாலயம் இடம் ஒதுக்கற் செலவு, காரியாலய உபகரணங்கள் இயந்திரங்கள் இயக்கச் செலவு ஆகிய செலவுகளை மீதப் படுத்த முடியும்.

காரியாலயத்தில் இட ஒதுக்கல் கூடிய செலவினை ஏற்படுத்தும் ஒரு விடயமாகும் அலுவலர்க்கு மேசை, கதிரை வசதிசெய்தல். (மேசை, கதிரைச் செலவு கிட்டத்தட்ட ரூபா 2500 ஏற்படும் வாடகைபெறுமானத்ய்தேவு உட்பட)

மின்சாரம், குளிரூட்டல் நிர்வாகச் செலவுகள் போன்றவேறு செலவுகளும் உண்டு. மேற்குறிப்பிட்ட செலகள் மாதாந்தம் ரூபா 25000/- வரை ஏற்படலாம்.

அலுவலகத்தில் (பேரேட்டு நிர்வாகம்) 10 - 15 அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்என வைத்துக் கொள்வோம் தரகுக்கம்பனிச் சேவையால் மேற்கூறிய ரூபா 25000/- நிறுவனம் சேமிக்கமுடியும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பிராந்திய கூட்டுறவுக் கல்லூரி

# பதவி வெற்றிடங்கள்

## அதிபர் பதவி

3300 - 4550
125 X 3 - 175 X 5

அ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டத்துடன் பயிற்சி தொடர்பான விடயங்களில் உயர் நிர்வாக மட்டத்தில் ஆறு வருட அனுபவம் கொண்டிருத்தல்.

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பட்டத்துடன் கூட்டுறவாளர்கள் மற்றும்கூட்டுறவுச்சங்க பணியாளர்களின் பயிற்சி தொடர்பிலான அரச அமைப்புக்கள் அல்லது கூட்டுறவு அமைப்புக்களின் விரிவுரையாளராக 6 வருட அனுபவம் கொண்டிருத்தல்.

## விரிவுரையாளர் பதவி

2505 - 3505
100 X 4 - 150 X 4

1. விரிவுரையாளர் - முகாமைத்துவம்

அ. கூட்டுறவுத்திணைக்களத்தின் பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரியிலோ அல்லது கூட்டுறவு முகாமை நிறுவனத்திலோவிரிவுரையாளராகஅல்லது முகாமை ஆலோசகராக 3 வருடங்கள் சேவை செய்திருத்தல்.

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பட்டத்துடன் விரிவுரையாளராக 1 வருட காலத்துக்கு குறையாத அனுபவம் கொண்டிருத்தல்.

இ. அங்கீகரிக்கப்பட்டவியாபார நிறுவனமொன்றின் நிர்வாக மட்டத்தில் 4 வருட காலத்திற்கு குறையாத அனுபவம் கொண்டிருத்தல் அவற்றுடன் 2 வருட அனுபவம் கூட்டுறவு நிறுவனங்களில் இருக்க வேண்டும்.

2. விரிவுரையாளர் - கணக்கியல்

அ. கூட்டுறவுத் திணைக்களத்தின் பொல்கொல்லை கூட்டுறவுக்கல்லூரியில்அல்லது கூட்டுறவு முகாமை நிறுவனத்தில்விரிவுரையாளராகவோ முகாமை ஆலோசகராகவோ 3 வருடத் திற்கு குறையாத காலத்துக்கு சேவையாற்றியிருத்தல் அல்லது மாதம் ரூபா 5000 000 -க்கு குறையாத விற்பனையைக் கொண்ட கூட்டுறவுச் சங்கமொன்றின் கணக்காளராக 5வருடத்திற்கு குறையாத சேவை அனுபவம் கொண்டிருத்தல்.

ஆ. கணக்கியல்,வர்த்தகம்,வியாபாரமுகாமை தொடர்பிலான பாடங்களில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகபட்டத்தைபெற்றிருப்பதுடன் 1வருடத்திற்கு குறையாத விரிவுரையாளராகஅனுபவம் கொண்டிருத்தல்.

❀ விண்ணப்பப் பத்திரங்களை உரிய முறையில் தயாரித்துகல்விச் சான்றிதழ்களுக்கானபோட்டோ பிரதியுடன் பொதுசெயலாளர் தேசிய கூட்டுறவுச்சபை 455, காலி வீதி, கொழும்பு 03. என்றவிலாசத்திற்கு அனுப்பவும்.

❀ விண்ணப்ப முடிவு திகதி 15 ஜூலை 1999

❀ விண்ணப்பப்பத்திரம் அனுப்பும் கடித உறையில் இடப்பக்க மேல் மூலையில் எப்பதவிக்கு விண்ணப்பிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிடவும்

# விதவையின் காணிக்கை

கோயில் உண்டியலுக்குப் பக்கத்தில் இயேசு நின்றுகொண்டிருந்தார். பணக்காரரும், ஏழைகளும் ஆக பலர் வழிபட வந்தனர். உண்டியலில் பணமும் போட்டனர்.

இயேசுபெருமான் சீடர்களை நோக்கி கூறினார்.

தேவனுடைய ஆலயத்துக்கு வருபவர்கள், அவன் பணிக்கெனப் பணம் தருகிறார்கள். பணம் படைத்தவர்கள் அதிக பணம தருகிறார்கள். அப்படிப் பட்ட பலரை இன்று கண்டேன்.

இங்கே ஒருபெண் வந்தாள். அவள் ஒரு விதவை அவளுக்காக உழைக்கவோ, உதவவோ யாருமில்லை. அவள் ஆடையே அவள் ஏழ்மை நிலையைக்காட்டியது. உண்டியற்பக்கம் போன அவள் தன் பணப்பையைத் திறந்தாள். அவள் செல்வமெல்லாம் அதனுள் இருந்த இரண்டே இரண்டு சிறுநாணயங்கள் தான். அவற்றை அவள் உண்டியலுக்குள் போட்டாள்.

## மணிமொழிக்கதைகள்

" எல்லோரையும் விட அவளே அதிகம் கொடுத்தாள். என்பது உங்களுக்குத்தெரியுமா " என்று இயேசு கேட்டார்.

" அதெப்படி? அவளிடம் இரண்டு சிறுநாணயங்கள் மட்டும் தான் இருந்தன."

" உண்மைதான் " பணம்படைத்தவர்கள் அதிகம் கொடுத்தார்கள். ஆனால் அவர்களிடம் பெருந்தொகைப்பணம் மிகுதியாய் இருந்தது. பணம் கொடுத்ததினால் அவர்களுக்கு எந்தப்பாதிப்பும் இல்லை. ஆனால் இப் பெண்னோ தன்னிடம் இருந்த அனைத்தையும் கொடுத்து விட்டாள். அவள் தியாகமே பெரிது " என்றார் இயேசு.

நன்றி - மணிமொழிக்கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ப்பு மிருகங்களிலிருந்து

(7ம் பக்கத் தொடர்ச்சி)

### 11 கொள்ளை நோய் (பிளேக்)

இலங்கையில்இந்நோயிருப்பதான அறிகுறிகள் இல்லை. இந்தியாவில் இந் நோய்த்தொற்று கடந்த வருடம் ஏற்பட்டதாலும் எலிகள் பிரதான காரணிக் காவிகளாகவிருப்பதாலும் இது பற்றி அறிந்திருத்தல் அவசியமாகின்றது. சுகமஞ்சரி முதலாவது வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டபிளேக்கைப்பற்றிய முழு விபரக்கட்டுரையை வாசித்தறிந்து கொள்ளவும்.

### 12 கால் - வாய் நோய் (Foot & Mouth disease)

இந்நோய் கால்நடைகளில் வைறஸ் கிருமிகளால் ஏற்படுகிறது; இளம்பராய மாடுகளை இந்நோய் அழிக்கின்றது. மாடுகளில் குணங்குறிகளாக வாயில், நாக்கில் கால் விரலிடையில் கிண்ணியின் மேற்பாகத்தில் கொப்புளங்கள் தோன்றி உடைந்து காயம் ஏற்படுத்தும் தடித்த எச்சில் வடிதல் காணப்படும். இது ஒரு கூடிய தொற்றுள்ள நோயாகையால் கால்நடைகளில் பரவாது தடுக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மனிதருக்கு இந்நோய்க் கிருமிகள் நோயுள்ள மிருகங்களிலிருந்து தொற்றுகிறது. ஆகையால் தடுப்பு முறையாக சகல கால்நடைகளுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும்.

நோயுள்ள மிருகங்களின் எச்சில் கொப்புளங்களிலிருந்து வெளியேறும் நீர் போன்றவற்றை அளையாமல் நோய்த் தொற்றைத் தடுக்கலாம். நோய்ப் பிரகடனம் செய்த பகுதிகளிலிருந்து இறைச்சி, பால் முதலியவற்றை வாங்கி உபயோகிப்பதைத் தடுத்தல் வேண்டும்.

### 13 ட்றிச்சினோசிஸ் (Trichinosis)

இது ட்றிச்சினெல்லா எனப்படும் ஒட்டுண்ணிகளால் ஏற்படும் நோய். இவ்வட்டப் புழுக்களின் குடம்பிகள் பன்றியின் தசைகளில் சிறப்பைகள் அமைந்திருக்கும், நன்றாக வேகவைத்துச் சமைக்கப்படாத பன்றி இறைச்சிமூலம் மனிதருக்குத் தொற்றுகிறது. தடுப்புமுறையாக பன்றி இறைச்சியை 66·C வெப்பத்தில் வேகவைத்து உண்பதன்மூலம் தொற்று ஏற்படுவதைத் தடுத்துக் கொள்ளலாம்.

### 14 ஹைடாரிட் நோய் ( Hydatidosis )

இதன் காரணியான எக்கைனோகோக்கஸ்எனப்படும் நாடாப்புழுக்கள் நாய்களின்சிறுகுடலில் வாழ்கின்றன. இப்புழுக்களின் முட்டைகள் நாயின் சருமத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதால் அதை அளைவதால் தொற்றேற்படுகின்றது. நாயின்மலத் தொற்றேற்பட்ட கீரை வகைகளை உண்பதாலும் தொற்றலாம்.

#### தடுப்பு முறை

1 நாய்களுக்கு குடற்புழு மருந்து கொடுத்தல்.

2 நாய்களை அளையாதிருத்தல்.

3 தொற்றுள்ள அழுக்கான கீரைகளை உண்ணாதிருத்தல்.

### 15 ரொக்ஸ காரியாசிஸ் ( Toxocariasis )

இதன் காரணியான ரொக்ஸகாரா கேனிஸ் என்ற வட்டப்புழுவின் முட்டைகள் நாயின் மலத்தில் வெளிவிடப்படுகின்றன. நாய்களை அளைவதால் கைகளில் முட்டைத் தொற்று ஏற்பட்டு வாய் மூலம் உட்கொள்ளப்படுகின்றது. குடம்பிகள் இரத்தோட்டம் மூலம் பல அவயவங்களை அடைந்து அலைந்து திரிகின்றன பின் இறக்கின்றன. இதனால் பாதிப்பு ஏற்படுகின்றது.

#### தடுப்பு முறை

நோய் பரவாது தடுப்பதற்கு நாய்களுக்கு குடற்புழு மருந்து கொடுக்கப்படல் வேண்டும்.

இதேபோன்று நாய், பூனை ஆகியவற்றின் கொழுக்கிப் புழுக்களின் குடம்பிகள் தோற்புரையில் மனிதருக்குத் தொற்றி, தோற்பகுதி பரவலாக அலைந்து புரை நோயை உண்டாக்குகின்றன. புழுக்கள் சென்ற வழியில் காயங்கள் உண்டாகின்றன. இதன் காரணமாக சொறியும், தோலழற்சியும் ஏற்படும். தடுப்பு முறையாக நாய், பூனைக்கு பூச்சி மருந்து கொடுத்தல் வேண்டும்.

### 16 பசு அம்மை நோய் ( Cowpox )

இது வைறஸ் கிருமியால் உண்டாகிறது பால் மடிக்காம்புகளில் சிறு தொப்புளங்கள் தோன்றுகின்றன. இக்கிருமிகள் மனிதருக்குத் தொற்றக் கூடியவை. மனிதருக்கு முக்கியமாக பால் கறப்போரின் கைகளில் ஒருவித தோலழற்சியை ஏற்படுத்தும்.

### 17 மயாசிஸ் ( Myiasis ) ( புழுப்பிடித்தல் )

ஈஸ்றஸ் ஓவிஸ் ( Oestrus ovis ) எனப்படும் பூச்சிகள் பொதுவாக செம்மறி ஆடுகளின் மூக்குத்துளையில் முட்டைகளை இடுகின்றன. குடம்பிகள் முட்டையிலிருந்து வெளிவந்து அங்கு வளர்கின்றன. பின் தங்கிய குடும்பங்களில் இப் பூச்சிகள் சிறு பிள்ளைகள் உள்ளாடை அணியாத விடத்து அவர்களின் மலசல வாசல்களில் முட்டை இடுகின்றன. முட்டையிலிருந்து வரும் குடம்பிகள் சிறுநீர்க்குழாய் வளியாக உட் சென்று சலப்பையை அடைகின்றன. பின் சிறுநீர் கழிக்கையில் வளர்ந்த குடம்பிகளும் பூச்சிகளும் சலத்துடன் வெளிவருகின்றன. இத்தகைய பாதிப்புக்கள் அநேகமாக மந்தைகள் வளர்க்கப்படும் இடங்களை அண்மித்த பகுதிகளில் ஏற்படுகின்றன. மந்தைகளின் கழிவுகள், பிளுக்கைகள் (சாணம்) குவித்து வைப்பதால் அவ்விடத்தில் இப்பூச்சிகள் நிறைந்து விளைகின்றன.

#### தடுப்பு முறைகள்

நல்ல சுகாதார பழக்கவழக்கங்கள் பேணப்படுவதுடன், மந்தைகளின் கழிவுகள் வீட்டிற்கு அண்மையில் குவித்து வைப்பதை தவிர்த்தல் வேண்டும்.

### 18 சிற்றக்கோசிஸ் ( Psittacosis )

நாம் செல்லப்பிராணிகளாக வளர்க்கும் கிளிகளில் இருந்து இந்நோய்த் தொற்று மனிதருக்கு உண்டாகிறது. இதன்காரணியாக வைறஸ் கிருமிகள் மனிதரின் சுவாசத் தொகுதியைப் பாதித்து நுரையீரல் அழற்சி குளிர்ச்சுரம் என்பனவற்றை உண்டாக்குகின்றது.

#### தடுப்பு முறை

கிளிக்கூடுகளை எந்த நேரமும் துப்பரவாக வைத்திருத்தல் வேண்டும்.

நன்றி - சுகமஞ்சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுதையும்; குதிரையும்.

முன்னொருகாலத்தில் அண்ணன் தம்பி இருவருமாக ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தார்கள். அண்ணன் ஒரு போர் வீரன் தம்பி பொதிசுமந்து உழைக்கும் தொழிலாளி.

இவர்கள் இருவரும் தத்தம் தொழில்களுக்கேற்றவகையில் அண்ணன் குதிரைஒன்றையும், தம்பி கழுதை ஒன்றையும் வீட்டுக்கோடியில் உள்ள கொட்டில் ஒன்றில் இரவில் கட்டி வளர்த்து வந்தார்கள்.

குதிரைக்கு வாரத்தில் ஒரு முறை அண்ணன் உடம்பு பிடித்து குளிக்கவார்த்து, வாலை வாரிவிட்டு, பேன் எடுத்து சுத்தமாக வளவளப்பாக வைத்திருந்தான். தினமும் பச்சைப் புல்லும், கோதுமை, கொள்ளு போன்ற தானியங்களையும் குதிரைக்கு உணவாகக் கொடுத்து வந்தான்.

குதிரைக்கு வழங்கப்படும் இத்தகைய உபசரணைகளையும் கழுதைபொறுமையுடன் பார்த்துக்கொண்டு ஏக்கப் பெருமூச்சு விடும்.

பகல் முழுவதும் பொதி சுமந்து கஷ்டப்பட்டு உழைக்கும் எனக்கு மட்டும் பழைய சோத்துக் கஞ்சியை அதுவும் உப்புப் போடாமல் வைக்கிறார்களே. ஆனால் வேலை ஒன்றும் செய்யாமல் உடம்பு நோகாமல் நிற்கும் இந்தக்குதிரைக்கு மட்டும் இத்தனை உபசரணைகளையும் செய்கிறார்களே. தானிய உணவு போதாது என்று ''பச்சைப்புல்'' லும் உணவாகப் போடுகிறார்களே என்று கழுதை தனக்குள் பொருமிக் கொண்டிருக்கும்.

குதிரையினது உயரத்துக்குஏற்ப அதற்கும் உயர்ந்த குணமும் இருந்தது ''நண்பனே கொஞ்சம் கோதுமை தின்கிறாயா?'' என்று குதிரை அன்புடன் கேட்கும்.

''எனக்கு அதெல்லாம் எதற்கு? உடம்பு நோகாமல் இருக்கும் உன் போன்ற சொகுசுக்காரன்களுக்குத் தான் அதெல்லாம் தேவை'' என்று கடுகடுத்துக் கூறி முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொள்ளும். குதிரை பாவம். அதற்குமேல் ஒன்றும் பேசாது இருந்து விடும்.

நீண்ட நாட்களுக்குப்பிறகு குதிரை ''மீண்டும் ஒருநாள் வழக்கம் போல் நண்பா இன்று கொஞ்சம் பச்சைப் புல் தின்கிறாயா?'' என்று கழுதையிடம் கேட்டது.

கழுதை உடனே கோபத்துடன் உன்னைப்போல் உடப்பு வளர்ப்பவர்களுக்குத் தான் பச்சைப் புல், நவதானியங்கள் எல்லாம் தேவை. நாமெல்லாம் தினமும் உழைக்கும் பாட்டாளி வர்க்கம். உழைக்கத்தான் நாம் பிறந்தவர்கள்'' என்று கடுகடுத்தது.

ஆனால் குதிரையோ இம்முறை வழக்கம்போல் பேசாமல் இருக்கவில்லை

''நண்பா இனிமேல் என்னுடைய தொந்தரவுகள் உனக்கு இருக்கமாட்டாது'' என்று குதிரை கூறியது.

கழுதையோ தனது வெறுப்பு மாறாமல் குதிரையை ஒருமாதிரியாகப் பார்த்தது.

கழுதைவியப்புடன், ''என்ன மன்னருக்குப் பிறந்தநாள் விழாவா? அணிவகுப்பில் கலந்து கொள்ளப் போகிறாயா? வண்ணவண்ணப்பட்டாடைகளும் மினுமினுக்கும் சேணங்களும் பூட்டி மினுக்கப்போகிறாயா?'' என்று கேட்டது

''இல்லை நீ நினைப்பது தவறு அண்டைநாட்டு மன்னனுடன் போர்புரிய இன்னும் சிறிது நேரத்தில் நம்நாட்டுப் படையுடன் புறப்படப்போகிறேன். படையணியின் முன்னணியில்தான் நான் நிற்கப்போகிறேன். எனவே நான் உயிருடன் திரும்பி வருவேன் என்று நிச்சயமில்லை'' என்று குதிரை கூறியது.

கழுதை திகைத்துப்போய் பதில் ஏதும் கூறத் தெரியாதுஅப்படியே நின்றது.

நண்பனே;'' மேனி மினுக்குக்காரன் சொகுசுக்காரன் என்றெல்லாம் என்னை ஏசினாயே? என்னைப்போன்றவர்களைஏன் இப்படியெல்லாம் வளர்க்கிறார்கள் என்று தெரியுமா? உள்நாட்டு பிரச்சினை என்றாலும், அண்டைநாட்டுப் பிரச்சினைஎன்றாலும் தாக்குதல்கள் நடைபெற்றால் நாங்கள் தான் முன்னே அனுப்பப்படுகிறோம். உன்பிறப்பு பரவாயில்லை தொந்தரவில்லாத அமைதியான எளிய வாழ்க்கை'' என்று கூறிய குதிரையின் கண்கள் கலங்கி குளமாகிவிட்டது குதிரைக்குமட்டும் என்ன? கழுதைக்கும்கூடத் தான்.

# தென் ஆபிரிக்கா

ஆபிரிக்காக் கண்டத்தின் தென்பகுதியில் இந்நாடு அமைந்துள்ளகாரணத்நால் தென்ஆபிரிக்கா எனகாரணப்பெயராகிவிட்டது.

அத்லாந்திக் பெருங்கடல், இந்துமாக்கடல், தென்கடல், ஆகிய மூன்றுகடல்களாலும் சூழப்பட்டுள்ள தென்ஆபிரிக்காவின்வடக்கேநமீபியா, பொட்ஸ்வானா, ஸிம்பாப்வே, மற்றும் மொஸாம்பிக்ஆகிய நான்கு நாடுகளைக் கொண்டதுதான் தென்னாபிரிக்கா.

பிரிட்டிஸ்காரரினால் கைப்பற்றப்பட்ட இந்நாடு 1910-ம் ஆண்டில் தென்னாபிரிக்கா எனப் பெயர் சூட்டப்பட்டது.

1948 ஆண்டு தேசியக்கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அங்கு நிறவெறி பேதம் தலைதூக்கத் தொடங்கின. 1961-ல் இடம்பெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பைத் தொடர்ந்து குடியரசாக மாறியது.

சிறுபான்மையினமான வெள்ளையர்கள் பெரும்பான்மையினத்தவரானகறுப்பினமக்களை ஆண்டு வந்தனர் இதனால் 1990-ல் பெரும் இனக்கலவரங்கள் வெடித்தன. 1994இடம்பெற்ற பொதுத்தேர் தலில் நெல்சன்மண்டேலா தலைமையிலான ஆபிரிக்க தேசியக்காங்கிரஸ் பெருவெற்றிபெற்று நெல்சன்மண்டேலா முதலாவது ஜனாதிபதியானார்.

| | |
|---|---|
| தலைநகர் | : பிரிட்டோனியா (நிர்வாகம்) கேப்டவுன் (அரசு) |
| பரப்பளவு | : 12,21037கிலோ மீற்றர். |
| மக்கள்தொகை | : 4.15 கோடி |
| மொழி | : ஆங்கிலம் மற்றும் இனத்தவர் களின்பிராந்தியமொழிகள். |
| சமயம் | : கிறிஸ்தவம் |
| நாணயம் | : ரான்ட் |
| கல்விஅறிவு | : 99% (வெள்ளையர்) 50% (கறுப்பினத்தவர்) |

பொருளாதாரம்: ஆபிரிக்க நாடுகளிடையே பொருளாதாரம் கூடியது தங்கம், வைரம் ஆகியன பெருமளவில் கிடைக்கின்றன. முக்கிய தொழிற்சாலைகளாக, உருக்கு பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் விளங்குகின்றன. தற்பொழுது விவசாயம் வளர்ந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News paper at the G. P. O
SriLanka Under No K. V. J. 59 / 87

# ஐக்கிய தீபம்

ஆனி - 1999

## கூட்டுறவுப் பயிற்சிபெறுவோர் சிறப்பாக கடமைபுரிய வேண்டும்

கூட்டுறவுப் பயிற்சிபெற்று அதனை முடித்து வெளியேறுபவர்கள் சிறந்த கூட்டுறவுத் தலைமைத்துவத்தை ஏற்று நடத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும் கூட்டுறவுக் கொள்கைகளின் வழி நின்று சனனாயகக்கோட்பாடுகளுக்கு அமைவாக புதிய கூட்டுறவு அமைப்புக்களை உங்கள் பகுதிகளில் உருவாக்க முன்வரவேண்டும்.''

யாழ். கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியில் சாதாரண பிரிவு பயிற்சியை முடித்து வெளியேறும் மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன்மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

மாணவர் தலைவர் திரு. ந பழனித்துரை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு செ.கு சண்முகநாதன் மேலும் பேசுகையில்,

கூட்டுறவுத் துறையில் புதியமாற்றங்களைக் கொண்டுவந்து அதன் மூலம் உங்கள் கிராமங்களில் கூட்டுறவைப் பரப்பவேண்டும் இதன் மூலம் நீங்கள் பெற்ற கூட்டுறவுப் பயிற்சியின் பலன்களை அனுபவிக்கக் கூடியதாக இருக்குமென்று கூறினார்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு பெ. கனகசபாபதி பேசும் போது கூறியதாவது;

சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களும், தனிப்பட்டவர்களும் கூட்டுறவுப் பயிற்சியைப் பெற்றுள்ளீர்கள், சங்கப் பணியாளர்களைப் பொறுத்தமட்டில் பெற்ற பயிற்சிகளின் மூலம் சங்கங்களை சிறப்பாக இயங்கவைப்பதற்கு முன்வரவேண்டும். தனிப்பட்ட பயிற்சியாளர்களைப் பொறுத்தவரையில் பெற்றபயிற்சியை அடிப்படையாக வைத்து வேலைவாய்ப்பைப் பெறுவதுடன்சென்ற இடமெல்லாம் கூட்டுறவுத் தன்மையை மிளிரச்செய்யவேண்டும்.

மாணவர் தலைவர் திரு ந. பழனித்துரை பேசும் போது நாம் கூட்டுறவுச் சங்கங்களில் இவ்வளவுகாலமும் வேலை செய்திருந்தாலும் இங்கு பெற்ற பயிற்சியின் மூலம் நாம் கூட்டுறவைப் பற்றி தெரியாத பல விடயங்களை அறிய முடிந்தது என்று கூறினார்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்டச் செயலாளர் திரு. சு சிவசுப்பிரமணியம் கல்லூரி அதிபர் திரு பொ. சண்முகசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

கல்லூரி விரிவுரையாளர்கள் பயிற்சியாளர்களால்மலர்மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்கள்.

பயிற்சி மாணவர்களால் கல்லூரி நூல் நிலையத்திற்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

மன்றச் செயலாளர் திரு. இ. சந்திரசேகரன் நன்றிகூறினார்.

## லொறி வழங்க ஏற்பாடு

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பத்து சங்கங்களுக்கு பொருள்களை ஏற்றி இறக்குவதற்கென பத்துலொறிகளை கொள்வனவு செய்வதற்கு 20 மில்லியன் ரூபாவை 10 சதவீத வட்டிக்கு வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு வடகிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்களை ஆளுநர் பணித்துள்ளார்.

சங்கங்கள் பொருள்களை ஏற்றி இறக்க நிலவும் லொறிபற்றாக்குறை பற்றியாழ்மாவட்டகூட்டுறவுச்சபைத் தலைவர் திரு பெ கனகசபாபதி கூட்டுறவுத்துறை அமைச்சரிடம் கோரிக்கைவிட்டிருந்தமைஇங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆணையாளர் பார்வையிட்டார்

அண்மைக்கால யுத்த அனர்த்தங்களினால் பேரழிவுக்குட்பட்ட யாழ். வீரசிங்கம் மண்டப புனர்அமைப்பு வேலைகளை வடக்குகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. கு சண்முகநாதன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

## கணித மொழியில் வரவேற்பு

ஒருமுறை இங்கிலாந்து சென்ற நேருஜி புகழ்பெற்ற கணிதநிபுணரும் தத்துவமேதையும், மாபெரும் சிந்தனையாளருமான பெர்ட்ரண்டு ரஸல் அவர்களைச் சந்தித்தார்.

நேருவை புன்முறுவலுடன் வரவேற்ற ரஸல் ''சைஃபா நாட்டிலிருந்து வரும் உங்களை மிகவும் அன்புடன் வரவேற்கிறேன் என்றார்

ஒன்றுமில்லாத நாட்டிலிருந்து வருகிறவர் நீங்கள் என்று ரஸல் தன்னை பரிகசிப்பது போலத் தோன்றியது நேருஜிக்கு. ஒருகணம் திகைத்தார் நேருஜி.

ரஸல் புன்முறுவலுடன் விளக்கினார். ''கணிதசாஸ்திரத்தில்பெரிய மேதைகளைப் பெற்றது உங்கள் நாடு. சைஃபர்'' என்ற ஜீரோஎண்ணை கண்டுபிடித்து உலகத்திற்குக் கொடுத்ததே இந்தியாதான். அந்தப் பெருமையை நினைவு படுத்தும் வகையில் தான் அப்படிச் சொன்னேன்.''

கணிதமேதை ரஸல்இந்தியாவின் இணையற்ற தலைவனுக்கு கணித மொழியிலேயேவரவேற்புக் கூறினார்

ஆதாரம்: பெரியோர் வாழ்வில் சுவையானநிகழ்ச்சிகள்.

## சிலநாடுகளின் சனத்தொகை - 1992 (மில்லியனில்)

| | | | |
|---|---|---|---|
| சீனா | 1165.8 | இத்தாலி | 58.0 |
| இந்தியா | 882.6 | ஐக்கியஇராச்சியம் | 57.8 |
| ஐக்கியஅமெரிக்கா | 255.6 | பிரான்ஸ் | 56.9 |
| இந்தோனேஷியா | 184.5 | எகிப்து | 55.7 |
| பிறேசில் | 150 8 | எத்தியோப்பியா | 54.3 |
| பாகிஸ்தான் | 121.7 | கனடா | 27.4 |
| பங்களாதேஷ் | 111.4 | சூடான் | 26.5 |
| நைஜீரியா | 90.1 | நேபாளம் | 19.9 |
| மெக்சிக்கோ | 87.7 | அவுஸ்திரேலியா | 17 8 |
| ஜேர்மனி | 80.6 | இலங்கை | 17 8 |
| வியட்னாம் | 69 2 | சவூதிஅரேபியா | 16.1 |
| பிலிப்பைன்ஸ் | 63.7 | சுவீடன் | 8.7 |
| ஈரான் | 59 7 | சுவிற்சலாந்து | 6.9 |

ஃ உலகம் முழுவதும் 5420
வளர்முக நாடுகள் 4137
வளர்ச்சி அடைந்தநாடுகள் 1224
} மில்லியனில்

ஆதாரம் - உலக சனத்தொகை மதிப்பீடு 1992 - வாஷிங்ரன்

யாழ்மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 14 மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மா. கூ. சபையினரால் 1999ம் ஆண்டு ஆனி மாதம் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org